# காந்தீயம்

விலை 10 சதம்

**சத்தியாக்கிரகம்**
சத்தியாக்கிரகம் என்பது எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு நியதி.
—காந்திஜி

மலர் 13 — காந்தி நிலையம்- உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 106) 1975 நவம்பர் | இதழ் — 2


# விஞ்ஞான யுகத்தில் சத்தியாகிரகம்

சத்தியாகிரகம் என்பது தினமும் செய்து வரவேண்டிய ஒரு விஷயமென்று நினைக்கக் கூடாது. நான் இப்போது கூறுவதைத்தான் காந்திஜியும் கூறி வந்தார். ஒரு வேளை அவர் கூறி வந்த மொழி வேறாக இருக்கலாம். சத்தியாகிரகம் என்பது. வாழ்க்கையுடன் நாணயமாக நடந்து கொள்வதாகும். மனிதன் திடீரென்று ஒரு கணத்திலா இறந்துவிடுகிறான்? அவன் ஒவ்வொரு வினாடியாக இறக்கிறான். ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை மனிதனுடைய இரத்தம் முழுதும் மாறி விடுகிறதென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பழைய இரத்தம் முழுதும் காய்ந்து போய் புது இரத்தம் உற்டத்தியாகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளில் மனிதன் முற்றிலும் மாறிவிடுகிறான் என்று நமது முன்னோர்கள் நம்பி வந்தனர். ஒரு வேளை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பெயரும் இப்போதைய பெயரும் ஒருவருக்கு ஒன்றாகவே இருந்தாலும் அவருடைய உருவம், குணம், முதலியவை மாறித்தான் இருக்கும். இதே காரணத்தினால் தான் நம் முன்னோர்கள் வாழ்க்கை என்னும் நாடகத்தை நான்கு ஆசிரமங்களாகவும், பல்வேறு காட்சிகளாகவும் அமைத்தார்கள். எனவேதான் இந்த உடலால் ஏற்படும் பாவத்தை பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்து போக்க வேண்டுமென்றார்கள். ஒவ்வொரு நிமிடமும் மனிதன் மாறிக்கொண்டே இருச்கிறான் என்பதுதான் இதற்குப் பொருள். எனவே நமது அன்றாட வாழ்க்கையை (சத்தியாக்கிரகத்தை) சத்தியத்தை வலியுறுத்துவதாக அமைய வேண்டுமென்பதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

சத்தியாகிரகியின் எந்த ஒரு செயலும். கேட்பதற்கும் பார்ப்பதற்கும் எல்லோருக்கும் குளிர்ச்சியாக இருக்க வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் சத்தியாகிரகம் தொடங்குகிறது என்று கேட்டவுடனேயே அச்சம் தோன்றுகிறது. எனவே அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. சண்டை என்பதற்கு மாற்றுச் சொல்தான் சத்தியாகிரகம் என்று கூட சிலர் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் சத்தியாகிரகத்தின் உருவம் சண்டையிலிருந்து முற்றிலும் வேறானது. சண்டையில் ஒரு தரப்புக்குத் தான் வெற்றி கிட்டுகிறது. ஆனால் சத்தியாகிரகத்தில் இரு தரப்பினருக்கும் வெற்றி கிட்டுகிறது. சண்டையில் ஒருவருக்கொருவர் மனம் ஒத்துப் போவதில்லை. ஆனால் சத்தியாகிரகத்தில் அவர்கள் இணைந்து விடுகிறார்கள். சத்தியாகிரகத்தில் அறிவின் மேல் படர்ந்துள்ள திரை விலகி சிந்திப்பதற்குத் தூண்டுதல் ஏற்படுகிறது. ஆனால் சண்டையில் அறிவு குன்றிப் போய்விடுகிறது. எதிரிலிருப்பவரின் மனம் சிந்திக்கத் தொடங்கும் போதுதான் சத்தியாகிரகம் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். எனவே சத்தியாகிரகமும் சண்டையும் முற்றிலும் வெவ்வேறானவை.



எனவேதான் எத்தனை முறைகள் வேண்டுமானாலும், ஒருவர் விஷயத்தைப் புரிந்து கொள்ளும் வரை திரும்பத் திரும்ப விளக்கிக் கூறிக் கொண்டே இருப்பேன் என்று சங்கராச்சாரியார் கூறியுள்ளார். இது தான் சத்தியாகிரகத்திற்குரிய இலக்கணமாகக் கருதப்படும். இதுபோன்றுதான் எத்தனை தடவைகள் ஒருவனை மன்னிக்க வேண்டுமென்று ஏசுவைக் கேட்டபோது ''ஏழு முறை'' என்று அவர் பதில் கூறினார். அதன் பின்னரும் ஒருவன் வெறுப்பைக் கைவிடாவிடில் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது 7X7 = 49 தடவைகள் மன்னிக்க வேண்டுமென்றார். ''நான் திரும்பத் திரும்ப விளக்கிக் கொண்டே இருப்பேன்; இதுதான் என்னுடைய வேலை'' என்று கடைசியாகக் கூறினார். உண்மையில் அறிவு ஆற்றல், சிந்தனை ஆற்றல் மீதான அசைக்க முடியாத நம்பிக்கைதான் சத்தியாகிரகம்.

உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். என் தரப்பில் உண்மை இருக்கிறதென்று எனக்குத் தோன்றுவதை எதிர் தரப்பார் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். எனவே நான் உண்ணாவிரதம் மேற்கொள்கிறேன். அவரும் உண்ணாவிரதம் தொடங்குகிறார் எனில் இதைப் பற்றி எவ்வாறு முடிவு செய்வது? என்னிடம் பட்டினி கிடக்கும் ஆற்றல் குறைவாக இருந்து அவரிடம் அதிகம் இருந்தால் அவர் தரப்பில்தான் உண்மை இருக்கிறது என்பது இதற்குப் பொருளா? பட்டினி கிடக்கும் ஆற்றல் ஒன்றை மட்டும் கொண்டு உண்மை எது என்பது பற்றி முடிவு செய்யப்படுமானால் சண்டையின் மூலம் ஏன் முடிவு செய்யக் கூடாது. ஜைனர்களுக்கு உபவாசமிருந்து பழக்கம் அதிகம். எனவே என்னால் அவர்களை எதிர்த்து உண்ணாவிரதமிருக்க முடியாது. இதனால் அவர் தரப்பில் உண்மையிருப்பதாக ஆகிவிடுமா என்ன? சகித்துக் கொள்ளும் ஆற்றல் உள்ளவரிடம்தான் உண்மையிருக்கிறதென்று ஆகிவிடுமல்லவா? அதிக ஆயுதங்களை வைத்திருபவரிடம் உண்மை இருக்கும் என்று நினைப்பது எவ்வளவு தவறோ, அதேபோன்று யாரிடம் சகித்துக் கொள்ளும் ஆற்றல் இருக்கிறதோ அவரிடம் உண்மை இருக்கிறதென்று நினைப்பதும் தவறுதான்.

சத்தியாகிரக ஆற்றல் என்பது தாங்கிக் கொள்ளும் சக்தியல்ல. சத்தியாகிரகத்தில் அதிகமாக சகித்துக் கொள்ள வேண்டுமென்பது உண்மைதான். எனினும் கூட பட்டினி கிடப்பதோ அல்லது சகித்துக் கொள்ளும் சக்தியோ சத்தியாகிரகத்தின் இலக்கண

(3 ஆம் பக்கம் பார்க்க)

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலை பேசி; 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 106

1975 நவம்பர்

# உண்மை வளம் - கல்வி

கல்வியே பெருந்தனம் என நம் முன்னோர்கள் சொல்வது வழக்கம். ஒரு நாட்டின் வளங்கள் எல்லாவற்றுள்ளும் கல்வி அறிவே மிக உயர்ந்தது. ஒரு நாட்டின் நீர்வள நிலவளங்களைச் செம்மைப்படுத்திக் குடிமக்களுக்கு வேண்டிய நுகர்வுப் பொருட்களை ஆக்கிக் குவிப்பதற்கு தொழில் நுட்ப அறிவும் விஞ்ஞானமும் மிக முக்கியமானவை. எனவே இதிலிருந்து என்ன புலனாகிறது? கல்வி அறிவே வெறுமையை வளமாக்கும் சக்தி படைத்தது என்பது புலனாகும்.

எவ்வளவுக்கு எவ்வளவு கல்வி உயர்கின்றதோ அவ்வளவில் நாட்டின் வளம் பெருகுகின்றது. விஞ்ஞானம் வளர்ந்து புதிய சாதனங்களைப் படைத்து விட்ட யுகத்தில், கட்டாயமாகத் தொழில் நுட்பக் கல்வி வேண்டியதேயாகும். இல்லையேல் மற்றை நாடுகளுடன் போட்டி போட்டு நாம் எப்படி எம் பொருளாதார வளத்தைப் பெருக்கலாம்? பொருளாதார நுட்பம், பொறியியல், எந்திரவியல் ஆகியவற்றில் கல்வி உயர்த்ததாயில்லாவிட்டால் ஒரு நாடு பல விடயங்களிலும் பின் தங்கி விடுவது கட்டாயமாக நடக்கக் கூடியதாகும். எனவே எல்லா வளங்களுள்ளும் சிறந்ததும் உயர்ந்ததும் கல்வி என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் கல்வி என்பது என்ன என்று ஒரு கேள்வி எழுகிறது? கல்வி என்பது வெறும் விஞ்ஞானத் தொழில் நுட்பமா? இவ்விடத்தில் கல்வியைப் பற்றி நாம் ஊன்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. கல்வி என்பது விஞ்ஞான யுகத்தில், வளர்ந்து வரும் பொருளாதார மேம்பாட்டுக் குறிக்கோளினால், ஒரு செல்வமீட்டும் உபகரணமாகவே பயன் படுகிறது. கல்வித் துறையில் முன்னேற்றம் என்று பேசப்படும் இடங்களிலெல்லாம் தொழில் நுட்பம் தான் பேசப்படுகிறது. தொழில் முன்னிலைக் கல்வியே பெரியதொரு கண்டு பிடிப்பாகக் கருதப்படுகிறது. விஞ்ஞானம் வளர்வதாலோ, மேன்மைக்கலைகளான தொழினுட்பம் வளர்வதாலோ வாழ்விலமைதி ஏற்படுகின்றதா? வயிற்றை நிரப்பி வாழ்வை வளம் செய்தல் அவசியம் தான். அதற்குரிய தொழில நுட்பமும் தொழிலை முன்னிலைப் படுத்தலும் வேண்டும் தான் ஆனால் வாழ்வில் அமைதி, தனி ஒருவர்க்குள், குடும்பத்திற்குள், சமுதாயாத்திற்குள், நாட்டினுள், நாடுகளுக்கிடையில் அமைதி வளம், சமுதாய சுமுகம் இக்கல்வியால் ஏற்பட்டுவிட்டதா? தொழில் பயின்று, வயிறு நிரப்பி உடலோம்பினால் வாழ்வு வளம் பெற்றுவிடும் என்று நினைப்பது எவ்வளவு தவறானது. தொழில் நுட்பம் வளர்ந்தது, விஞ்ஞானம் வளர்ந்தது, பொருளாதர்ரம் பெருகியது, மருத்துவமுறை விரிவடைந்தது; ஆனால் இவற்றால் மக்களிடையே அமைதி, சமாதானம், நல்லுறவு, பெருகியிருக்கிறதா. இல்லையென்றே சொல்ல வேண்டும். ஏன்?

எங்கள் கல்வி விஞ்ஞானம், விஞ்ஞானம், பொருளாதாரம், பொருளாதாரம் என்று ஊன் பெருக்கப் போதிக்கிறதே அன்றி மனித உயிர் வளம் பெறப் படிப்பிக்கவில்லை. செய்திறமையைப் படிப்பிக்கிறதே அன்றி மனித உறவு வளர்க்கும் முறைமையைப் படிப்பிக்க வில்லை. இந்தக் கல்வி முறை செய்திறன், அறிவு நுட்பம் ஆகியவற்றை அழுத்தி விரிவு செய்கின்றது. கல்வி நடாத்துமுறை, பொருளாதார அமைப்பு முறை எல்லாம் உறவு முறையில் போட்டியையும் பொறாமையையும், மாற்றாரை வீழ்த்தும் முறைமையையும் நேர்முகமாக ஊக்கி வளர்க்கின்றன. அதன் பயனாக நாட்டில் போட்டி பொறாமை குரோதம் ஆகியவையே வளர்ந்தோங்குகின்றன.

செய்திறமை, அறிவு நுட்பம், தொழின் முன்னிலை ஆகியவற்றோடு, சுமுகஉறவு, கருத்துப் பரிமாறல், பரோபகாரம், சிரமதானம் முதலியன பாடங்களாய் அமைந்தால், நாடு எவ்வளவில் முன்னேறும். தொழில் நுட்பத்திற்குப் பதிலாக தொழில் அறம் படிப்பித்தால், எங்கள் நாட்டுப் பொருளாதாரம் இப்பொழுது இருக்கும் நிலையிலும் உயர்ந்த பொருட்பயனைத்தரும். தொழில் நுட்பத்தில் தேர்ச்சிபெற்று உயர் பதவியிலிருப்பான் ஒருவன் நுட்பத்தைப் பயன் படுத்தாது கள்ளத்தைப் பயன்படுத்துவானாயின் தொழில் முன்னிலை நல்நிலை அடையுமா?

இவ்விடத்தில் தான் உண்மைக் கல்வியின் பெரும் பயன் நமக்குத் தோன்றும் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக, விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்ற போர்வையில் உலகம் சில துறைகளில் முன்னேறி உள்ளது. ஆயினும் பல துறைகளில் பின் தங்கியுள்ளது.

விஞ்ஞானக் கல்வி நேர்முறையான கல்வியானது, வாய்பாடுபோன்றது. விஞ்ஞானம் ஒரு புத்தி நுட்ப உபகரணம். ஒரு சந்ததியிலிருந்து மற்றைய சந்ததி அதைப் பெற்று இன்னும் மேலாக அபிவிருத்தி செய்யலாம். மக்களுக்குள் அபிப்பிராய வேறுபாட்டை விளைவிக்காதகல்வித் துறைகளைக் கற்றலும், விரிவு செய்தலும் கடினமான பிரச்சினை அன்று. மிக மிக இலகுவானது. கணிதத்திலோ, விஞ்ஞானத்திலோ மக்கள் அபிப்பிராயம் வேறுபடாது. ஆனால், ஒழுக்கவியல், அரசியல், சமூகவியல், பொருளாதாரம் போன்ற துறைகள் நேரான விஞ்ஞானங்கள் அல்ல. இவற்றுள் வேறுபாடுகள், முரண்பட்ட கருத்துகளுக்கு இடமுண்டு. இவற்றினால், இத்துறைகளில் எழும் கருத்து வேறுபாடுகளினால் தான் உலகில் பிணக்குகள் உண்டாகின்றன. ஏனெனில் இத்துறைகள் விஞ்ஞானம், கணிதம், தொழில் நுட்பம் போன்று வாய்பாடாகக்கற்றுப்பயின்று கடைப்பிடிக்கக் கூடியனவல்ல. எனவே இவற்றிலும் உலக மக்களிடை ஒருமைப்பாட்டை வளர்க்கக் கூடிய ஒரு புதிய கல்விமுறையை நாம் தோற்றுவித்தல் வேண்டும். அது தொழின் முன்னிலைக் கல்வி போல் அறமுன்னிலைக்கல்வியாக அமைய வேண்டும். இவ்வுலகில் வாழ்வதற்குப் பொருட்பயன் எவ்வளவு முக்கியமோ அதிலும்கூடியதாக அருள் பயன் வேண்டும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை என்பது அறவுரை. உண்மையில், அறம் இல்லார்க்கு பொருள் கோடி இருந்தாலும் இவ்வுலகமில்லை. உண்மையென்னவென்றால் தனி ஒருவனிடம் பொருளிருந்தாலும், அவனிடம் சூழலிலும் அறம் இல்லையென்றால் அந்தப் பொருளால் பயனில்லை. எனவே பொருள் வளர்ச்சியோடு உலகில் அற வளர்ச்சி வேண்டும்.

இதற்கமைந்த பெருங் கல்வி வேண்டும். நாம் முன் கூறிய, அரசியல், பொருளியல், சமூகவியல் துறைகளில் புகுந்து இயங்கி நேரிய வழிகாட்டியாக விளங்கக் கூடிய ஒரு பயன் நிலை (தொழில் முன்னிலைக்கு ஈடாக)க் கல்வியை நாம் பள்ளிக் கூடங்களில் படிப்பிக்க வேண்டும்.

மக்களிடை எழும் பல்வித பிணக்குகளை எவ்வாறு ஒரு மனிதன் அறநிலையால், தன் செவ்விய குணப் பண்பாட்டினால் தீர்க்கலாம் என்று இது வழி காட்டக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

இக் கல்வி, மேற்கூறிய துறைகள் யாவற்றையும் ஊடுருவி நின்று அவற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாக் கருத்தரங்கு

# புங்குடுதீவிலிருந்து ஒரு குரல்

வவுனியாவில் 14. 9. 75 இல் நடை பெற்ற சர்வோதய ஊழியர் மகாநாட்டில் இடம் பெற்ற "சர்வோதய தத்துவமும் அதனை இந் நாட்டில் பரப்பும் வழி முறைகளும்" என்ற கருத்தரங்கு மகா நாட்டை பொலிவுறச் செய்தது.

பலர் நல்ல கருத்துக்களை வழங்கினர். அக கருத்துரைகளில் எவையெவை இன்றைய நிலையில் சர்வோதய தத்துவத்தை உலக இயக்க மாக்குவதற்குப் பயன் படக் கூடியன என்பதைப் பார்ப்பது முக்கியம். கருத்தரங்கில் கலந்து கொண்ட திரு. ச. அ. டேவிட், திரு. கு. நேசையா போன்றவர்கள் சில தேவையான கருத்துக்களை முன் வைத்தனர். ஆனல் அக் கருத்துக்கள் எவ்வளவு தூரத்துக்குச் சரியானவை என்பதை நாம் அறிய வேண்டும்.

திரு. டேவிட் கூறுகையில் இன்றைய நிலையில் எல்லா மக்களும் சர்வோதய ரீதியில் வாழ்ந்து தம் சுயாட்சியைப் பெற வேண்டுமானல் எல்லா வித ஆடம்பரங்களையும் கைவிட்டு உடுப்பதற்கு எளிய தூய உடையும், உண்பதற்கு தாம் உழைக்கும் உணவும், ஆரோக்கிய வாழ்க்கையுமே போதும் என்ருர். உண்மை தான். தேவையற்ற பொருட்களுக்கெல்லாம் மனிதன் அடிமையானதினல் தான் இன்றைய பஞ்சத்துக்கும் பொருளாதாரப் பற்ருக்குறைக்கும் காரணமாகிருன். ஆனல் இந்த எளிய வாழ்க்கையை எல்லோரும் பின்பற்றுகிருர்கள் என்று வைத்துக் கொண்டாலும் பொருளாதார ரீதியில் எல்லோரும் தன்னிறைவு கண்டு விட முடியாது. காரணம், ஏற்கனவே முதலாளிகளாய் உள்ளவர்கள் தம் சொத்துக்களையும் தனத்தையும் பொதுச் சொத்தாக்கின்ற மனத்தை அடைய வேண்டும். அந்த நிலையை உருவாக்குவதற்கு சர்வோதய வாதிகள் தமக்குள் எளிய வாழ்க்கை வாழ்ந்து விடுவதோடல்லாமல் இயக்க ரீதியாகப் போராடவுந் தான் வேண்டும். எளிய வாழ்க்கை வாழ்ந்து விட்டாமல்மட்டும் இதுவந்து விடாது.

இந்த இயக்க ரீதியான போராட்டத்துக்கு திரு. கு. நேசையா, ஜெயப்பிரகாஷ் நாராயணனின் போராட்டத்தை உதாரணம் காட்டி விளக்கியது உதவலாம். இத்தகைய போராட்]ங்களுக்கு இன்றைய விவசாயிகளையும் இளந்தலை முறையினரையும் அதிகமாகப் பயன் படுத்தலாம். ஆனல் இத்தகைய போராட்டங்களின் போது பல் வகையான படு பிற்போக்கு கட்சியினரும் தமது சுயலாபம் கருதி சத்தியவான்களாக நமது அணியில் வந்து சேரலாம். ஜெயப்பிரகாஷின் பின்னுக்கு நிற்கும் ஜனசங் போன்ற கட்சிகளே அவரது நடத்தையிலும், சத்திய பலத்திலும் சந்தேகம் ஊட்டுபவையாக உள்ளன. இவற்றைச் சத்தியவான்கள் முதலில் தெளிவு படுத்த வேண்டும்.

அடுத்ததாக யந்திர நாகரிகத்திலிருந்து மனிதன் விடுபடுவதே மகாத்மா இன்றைய தொல்லை நிலைகளுக்கு வழியாகக் காட்டியுள்ளார் என்னும் அந்த விடுதலையை தரக் கூடிய ஒரே பொருள் இராட்டையே என்றும் அங்கு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன. அதுவும் உண்மையே. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். மகாத்மா எழுதிய 'ஹிந்து சுயராஜ்' என்ற நூலை விமர்சித்த காந்தீயத்துக்கு சார்பான சில மேல் நாட்டறிஞர், அவரது யந்திரப் புறக்கணிப்பை யிட்டுக் கூறுகையில் இராட்டையும் ஒரு யந்திரமே, மகாத்மா அணிந்துள்ள மூக்குக் கண்ணுடியும் யந்திரமே. இவற்றுக்கு விட்டுக் கொடுக்கப் போனல் இவை பல தொடர் விட்டுக் கொடுப்புகளுக்கு இடந்தர வேணும் என்றனர். இதற்குப் பதில் அளிக்கையில் "காலம், இடம் சூழலுக்கேற்ப இவை நடை முறைப் படுத்தப்பட வேண்டும்" என்ற பாணியிலும் மகாத்மா கூறியுள்ளார்.

இன்று ஒரு கேள்வி எழுகிறது. இன்றைய உலகப் போக்கு இவ்வளவு தூரம் யந்திர மயமாகவே ஆக்கப்பட்ட பிறகு திரும்பவும் இவற்றையெல்லாம் விட்டு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பல் என்பது எல்லா இடங்களிலும் செயற்படுத்தக் கூடியதல்ல. அப்படியாயின் எத்தனையோ அனர்த்தங்கள் நேரலாம். இதற்கு மருந்தாக நாம் ஒன்றைக் கூறலாம். மறைந்த எழுத்தாளர் அல்டஸ் ஹக்ஸ்லி தனது உன்னத புது உலகு (BRAVE NEW WORLD) என்ற நாவலில் மனித வாழ்க்கையே யந்திர மயமாக்கப்பட்டு அதற்கே அடிமையாக்கப்பட்டு தத்தளிக்கும் நிலையில் அவர் கூறும் மருந்து மனிதன் தனது ஆத்மீக சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே. ஆத்மீக நிலையில் மனிதன் வாழும் போது எந்தச் சூழலிலும் எந்தப் பொருட்களாலும் கட்டுப் படாமல் ஆத்ம கலா சாரத்தைப் பேணுபவனுக வாழலாம். அந்த ஆத்ம நிலையே சுயாட்சியாகும். ஆதிகாலத்தில் சம்சார பாரத்தை தாங்கப்பயந்து வாழ்க்கையைத் துறந்து ஓடிய துறவிகள் போல் இன்று நாம் கருவிகளுக்குப் பயந்தோடத்தேவையில்லை. தேவையான இடத்தில் அவற்றைப் பாவித்தும் தேவையற்ற இடத்தில் ஒதுக்கியும் வாழும் பூரண நோக்குடையவர்களாக வாழ வேண்டும்.

—மு. பொன்னம்பலம்

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல்ல. சகித்துக்கொள்ள வேண்டி ஏற்படுவதால் சகித்துக்கொள்வோம் என்பது சரிதான். ஆனல் சகித்துக் கொள்ளும் வேலைத்திட்டம் உண்மையை நிலை நாட்டுவதற்கான வேலைத் திட்டமாக இருக்க முடியாது. உண்மையை நிலைநாட்டுவதற்கு கருத்து தவிர வேறு எந்த ஆற்றலுமே இல்லை. நீங்கள் உங்களது கருத்தை எனக்கு விளக்கிக் கூறுங்கள். நான் எனது கருத்தை உங்களுக்கு விளக்குகிறேன். இதைத் தவிர உண்மையை நிலைநாட்டக் கூடிய எந்த சக்தியுமேயில்லை. விஞ்ஞான யுகத்தில் துணிச்சலுடன் தமது கருத்துக்களை சமுதாயத்திற்கு விளக்கிக் கூறவேண்டுமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு முறை சமுதாயத்திற்கு விளக்க முடியாவிடில் திறமையுடன் விளக்கிக் கூற வேண்டும். இததான் சத்தியாகிரகத்தின் மிகத் தூய்மையான உருவம்.

எனவே நாம் துணிவுடன் உண்யான கருத்துக்களைத் தொடர்ந்து பிரசாரம் செய்வதுடன் நாமும் அதன்படி நடப்போமானல் இக் கருத்து காற்றின் மூலமாக பரவும் இந்த விஞ்ஞான யுகத்தில் இதைத் தவிர வேறு வழிகளை நாம் பயன்படுத்தினல் சத்தியாகிரகத்தின் சக்தியை கண்டு பிடிக்க முடியாது. மாருக எதிரான பொருள்தான் சத்தியாகிரகத்துக்கு ஏற்படும்.

—விஞேபாஜி

# அகில இலங்கையிலும் நடைபெற்ற
# காந்தி ஜயந்தி விழாக்கள்

## கொழும்பில்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க-கொழும்புக் கிளையின் ஆதரவில், வெள்ளவத்தை-இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் காந்தி ஜயந்தி விழா திரு. ச. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மறைத்திரு யே. மைக்கல் சவிரிமுத்து, திரு. டி. அறம்பத்த, முதலியார். செ. சின்னத்தம்பி ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கொழும்பு பிராந்தியப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. பரிசு பெற்ற மாணவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

திருமதி. தேவகி குமாரசாமி குழுவினர் பக்திப்பாடல்கள் பாடினார்கள்.

★ ★ ★ ★

கொழும்பு- செட்டித்தெருவிலுள்ள இந்து இளைஞர் அறிவொளி மன்றத்தில் திரு. து. பாலச்சந்திரன் தலைமையில் காந்தி ஜயந்தி விழா நடைபெற்றது. செல்வி. பொ. பவானி கருத்துரை வழங்கினார்.

★ ★ ★ ★

இலங்கை இந்திய முன்னேற்றச் சங்க ஆதரவில் காந்தி ஜயந்தி விழாவை முன்னிட்டு கொழும்பு-செட்டியார் தெரு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் விசேட பூசை நடைபெற்றது. இந்திய தூதரகத்தைச் சேர்ந்த திரு. டி. எஸ். மணி கருத்துரை வழங்கினார்.

## ஆலிஎலவில்

ஆலி எல - அங்குருமலை பிரிவைச் சேர்ந்த காந்தி மன்றத்தினர் சிக்கனமாகவும் சிறப்பாகவும் காந்தி ஜயந்தி விழாவைக் கொண்டாடினர்.

## யாழ்ப்பாணத்தில்

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றமும் அகில இலங்கைக் காந்தி சேவா சங்க யாழ். கிளையும் சேர்ந்து வீரசிங்கம் மண்டபத்தில் காந்தி ஜயந்தி விழாவைக் கொண்டாடின. விழாவிற்கு கூட்டுறவு அதிபர். திரு. செல்வரத்தினம் தலைமை வகித்தார்.

வண. தா. இரா. அம்பலவாணர், பண்டிதை. செல்வி. தங்கம்மா - அப்பாக்குட்டி திரு. க. சி. குலரத்தினம் ஆசிரியர் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

இசைமணி மோகனம்பிகை கணேசன் அவர்கள் காந்திய கீதங்கள் பாடினார்.

## கிழக்கிலங்கையில்

கிழக்கிலங்கை காந்தி இளைஞர் மன்ற ஆதரவில் மட்டக்களப்பில் நடைபெற்ற காந்தி ஜயந்தி விழாவில், சைவப்புலவர். திரு. வெ. சித்திவிநாயகம் ஆசிரியர் உரை நிகழ்த்தினார்.

மில்க்வைற் சோப் அதிபர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா அன்பளிப்புச் செய்த காந்தி அடிகளின் திருவுருவப்படங்களையும், பொன் மொழிகளடங்கிய பிரசுரங்களையும் திருவாளர்கள் க. பாரதிதாசன், க. மகேந்திரன் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவுக்கு முன், மௌன ஊர்வலத்தைத் தொடர்ந்து, மட்டுநகர் நகர வீதியிலுள்ள மகாத்மா காந்தி அடிகளின் திருவுருவச்சிலைக்கு அன்பர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்தனர்.

## அநுராதபுரத்தில்

அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில், வித்தியாலய அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற காந்தி ஜயந்தி விழாவில் ''மகாத்மா காந்தியுடன் எனது அநுபவங்கள்'' என்னும் பொருள் பற்றி தியாகி. கோ. இராஜகோபால் உரை நிகழ்த்தினர். ஆசிரியர். நா. குமாரசாமி அவர்கள் நன்றியுரை கூறினர்.

## உருத்திரபுரத்தில்

உருத்திரபுரம் - காந்தி நிலையத்தில் காந்தி ஜயந்தி விழாவும் சர்வதேச சிறுவர் தின விழாவும் நடைபெற்றன. சிறுவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. அகில இலங்கை காந்தி சேவா சங்க பொருளாளர் திரு. க. மயில்வாகனம் மகாத்மா காந்தி அடிகளின் போதனைகளைப் பற்றி உரையாற்றினர்.

## தர்மபுரத்தில்

தர்மபுரம்-கஸ்தூரிபாய் காந்திநிலையத்தில் செல்வி. க. சரவணமுத்து அவர்களின் தலைமையில் சர்வதேச சிறுவர் தின விழாவும் காந்தி ஜயந்தி விழாவும் நடைபெற்றன. விழா ஆரம்பமாவதற்கு முன் 15,000 ரூபா செலவில் கட்டிய 31 அடி ஆழமும் 24 அடி விட்டமும் உடைய கிணற்றிலிருந்து சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா தம்பதிகள் நீரை அள்ளி நீர் உபயோகத்தைத் தொடக்கி வைத்தார்கள். தென்னை, பனை, இலுப்பை, வில்வம், பலா நடப்பட்டன. விழாவில் திருவாளர்கள், இ. கந்தையா, க. சி. குலரத்தினம், திருமதி. வள்ளிநாயகி-இராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்கள்.

## வவுனியாவில்

அகில இலங்கை காந்திசேவாசங்க வவுனியா கிளையும் குசைப்பிள்ளையார் குளம் வாலிப முன்னேற்ற சங்கமும் சேர்ந்து திரு. ச.அ.டேவிட் அவர்களின் தலைமையில் 106ஆவது காந்திஜயந்தி விழாவைக் கொண்டாடின. திருக்கோணமலை காந்திவாத்தியார், பொ. கந்தையா, திருமதி. நல்லதம்பி, திரு. கணேசன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றினுள் நிற்கும் நிலையான பயனை விஞ்ஞான முறையினளவிற்குக் கொண்டு வரக் கூடியதாயிருத்தல் வேண்டும். எனவே இது இயல்பாகவே அறக்கல்வியாகவும், பௌதிக விஞ்ஞானங்களின் அடிப்படைக்கு அப்பாற்பட்ட ஒரு மெய்ப்பயனிலையை ஒரு நியமமாகவும் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய ஒருகல்வியே உண்மையானபயனுடையவளம் ஒன்றை மனித குலத்திற்கு அளிக்க முடியும். இக்கல்வி மனிதகுலத்திற்குப் பொதுவான அறத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

— இ. இ.

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
Registered at the G. P. O. as a Newspaper in Ceylon